மின்னணு வேளாண்மைத் திட்டம் விரிவாக்கம்: விவசாயிகள் எதிர்பார்ப்பு

-கே. சுரேஷ்-

First Published : 07 Dec 2011 03:00:56 AM IST



ஆலங்குடி: வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் செயல்படுத்தப்படும் மின்னணு வேளாண்மை (இ.வேளாண்மை) திட்டத்தை அனைத்துக் கிராமங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

மேலும், போதிய எண்ணிக்கையில் வேளாண் களப் பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்கின்றனர் அவர்கள்.

வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களில் கண்டுபிடிக்கப்படும் புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு கொண்டு சேர்ப்பதில் வேளாண் விரிவாக்க அலுவலர்களின் பங்கு மிகவும் முக்கியமானது.

அதேவேளையில், கண்டுபிடிப்புகள் அதிகளவில் இருப்பினும், அதை விவசாயிகளிடத்தில் கொண்டு சேர்ப்பதில் நிலவும் பின்னடைவுக்கு வேளாண் துறையில் போதிய எண்ணிக்கையில் களப் பணியாளர்கள் இல்லாததே முக்கியக் காரணம்.

இதனால், பயிர் நோய்த் தாக்குதலுக்கு உள்ளாகும் போது பூச்சி மருந்துக் கடைக்குச் சென்று, அந்தக் கடைக்காரர் கொடுக்கும் பூச்சிக் கொல்லி மருந்தையே உபயோகிக்க வேண்டியுள்ளது.

இதற்குத் தீர்வு காணும் வகையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உலக வங்கி, தமிழக அரசின் நீர்வள, நிலவளத் திட்டத்தின் உதவியுடன் மின்னணு வேளாண்மை என்ற திட்டத்தை நிகழாண்டு அறிமுகப்படுத்தியது.

இதன்படி, சாகுபடி தொடங்கி பயிர் அறுவடை வரை ஏற்படும் அனைத்து சந்தேகங்களுக்கும் அந்தந்தக் கிராமங்களில் பணியாற்றும் இ.வேளாண்மை களப் பணியாளர்களின் செல்போனுக்கு தொடர்பு கொண்டால், அவர்கள் தோட்டத்தை ஆய்வு மேற்கொண்டு, பூச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியாளர்களிடம் தகவல் பெற்று, விவசாயிக்கு விளக்கம் அளிப்பர். இந்தத் திட்டம் இப்போது தெற்கு வெள்ளாறு உப வடிநிலப் பகுதியின் கீழ் வரும் கிராமங்களில் செயல்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.

இடுபொருள்கள் விலை உயர்வு, உற்பத்திப் பொருள்களுக்கான விலை குறைவு உள்ளிட்ட பிரச்னைகளுக்கு மத்தியில், உணவுப் பொருளை அதிகளவு உற்பத்தி செய்ய வேண்டுமெனில், மின்னணு வேளாண்மைத் திட்டத்தை அனைத்துக் கிராமங்களிலும் அமல்படுத்தி, போதிய எண்ணிக்கையில் களப் பணியாளர்களை நியமிக்க வேண்டும்.

இதுகுறித்து விவசாயி அ. கருப்பையா கூறியது:

ஆலங்குடி பகுதியில் ஆழ்குழாய்க் கிணறுகளைக் கொண்டு நெல், வாழை, சோளம், கரும்பு, கத்தரி, வெண்டை, பாகல், புடலை, வெள்ளரி உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், எந்த மருந்தைத் தெளிப்பது என்பது குறித்து யாரிடமும் கேட்க முடியவில்லை. எனவே, ஒவ்வொன்றாகத் தெளித்து, உரிய பூச்சிக் கொல்லி மருந்தைத் தேர்வு செய்ய வேண்டியுள்ளது. இதனால், பெரும் இழப்பைச் சந்திக்க வேண்டியுள்ளது. எனவே, அனைத்துக் கிராமங்களிலும் மின்னணு வேளாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்றார் அவர்.

இதுகுறித்து புதுக்கோட்டை சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் எஸ்.பி. முத்துக்குமரன் கூறியது:

இந்தியாவில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்துவதற்கு மின்னணு வேளாண்மைத் திட்டம் மிகவும் பயன்படும். இந்தத் திட்டம் இப்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் தெற்கு வெள்ளாறு பகுதியில் இரண்டு கிராமங்களில் செயல்படுத்தப்படுவதாகத் தெரிய வந்ததுள்ளது. இந்தத் திட்டத்தை அனைத்துக் கிராமங்களுக்கும் விரிவுபடுத்தும் வகையில், அந்தத் துறையில் திறமை வாய்ந்த களப் பணியாளர்களை போதிய எண்ணிக்கையில் நியமிக்க வேண்டும் என்றார் அவர்.

**பெரியாறு பிரச்னை: கேரள தலைவருடன் ஞானதேசிகன் பேச்சு**

First Published : 07 Dec 2011 02:16:21 AM IST

Last Updated : 07 Dec 2011 04:29:34 AM IST



சென்னை, டிச. 6: முல்லைப் பெரியாறு பிரச்னை தொடர்பாக கேரள மாநில காங்கிரஸ் தலைவர் ரமேஷ் சென்னிதலாவுடன் தொலைபேசியில் பேசியதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பி.எஸ். ஞானதேசிகன் தெரிவித்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைமை அலுவலகமான சத்தியமூர்த்தி பவனில்

அம்பேத்கரின் நினைவு நாள் செவ்வாய்க்கிழமை அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற ஞானதேசிகன், முன்னாள் மத்திய இணை அமைச்சர் திருநாவுக்கரசர் உள்ளிட்டோர் அம்பேத்கரின் உருவப் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் ஞானதேசிகன் கூறியது:

முல்லைப் பெரியாறு அணைப் பிரச்னை, பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. ஆனால், இப்போது திடீரென மக்களிடம் அச்சத்தைப் பரப்பிவரும் கேரளத்தின் செயல்பாடுகள் கண்டிக்கத்தக்கது. இது பற்றி கேரள மாநில காங்கிரஸ் தலைவர் ரமேஷ் சென்னிதலாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வலியுறுத்தி உள்ளேன் என்றார் ஞானதேசிகன்.

**3 நீர்த்தேக்கங்களில் இருந்து தண்ணீர் திறப்பு: முதல்வர் உத்தரவு**

First Published : 07 Dec 2011 01:58:32 AM IST



சென்னை, டிச. 6: மூன்று மாவட்டங்களில் உள்ள நீர்த்தேக்கங்களில் இருந்து புதன்கிழமை தண்ணீர் திறந்து விட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து, செவ்வாய்க்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு:

கடலூர் மாவட்டம் வெலிங்டன் நீர்த்தேக்கத்தில் இருந்து தண்ணீர் திறந்து விட விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வரப்பெற்றன. அவர்களது வேண்டுகோளை ஏற்று புதன்கிழமை முதல் வெலிங்டன் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும். இதன்மூலம், கடலூர் மாவட்டத்தில் 15 ஆயிரத்து 820 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

தருமபுரி மாவட்டம் வாணியாறு நீர்த்தேக்கத்தில் இருந்து பழைய மற்றும் புதிய ஆயக்கட்டுப் பகுதிகளுக்கும், சின்னாறு நீர்த்தேக்கத்தில் இருந்து பழைய ஆயக்கட்டு ஏரிகளுக்கும், புதிய ஆயக்கட்டுப் பாசனப் பகுதிகளுக்கும் பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடும்படி விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்துள்ளன.

அவர்களது கோரிக்கையை ஏற்று, வாணியாறு மற்றும் சின்னாறு நீர்த் தேக்கங்களில் இருந்து புதன்கிழமை முதல் தண்ணீர் திறந்து விட உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்மூலம், வாணியாறு நீர்த்தேக்க பாசன அமைப்பின் கீழுள்ள 10 ஆயிரத்து 517 ஏக்கர் நிலங்களும், சின்னாறு நீர்த்தேக்கத்தின் பாசன அமைப்பின் கீழுள்ள 3 ஆயிரத்து 198 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும்.

கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூர் பெரிய ஏரியில் இருந்து இரு பிரதான கால்வாய்களில், சுழற்சி முறையில் இரண்டாம் போக சாகுபடிக்காகத் தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. இதையடுத்து, புதன்கிழமை முதல் தண்ணீர் திறக்கப்படும்.

இதன்மூலம், 4 ஆயிரத்து 729 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று முதல்வர் ஜெயலலிதா வெளியிட்ட அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

**முட்டை விலை 5 காசுகள் உயர்வு**

First Published : 06 Dec 2011 01:14:51 PM IST

நாமக்கல், டிச. 5: கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி, நாமக்கல் மண்டலத்தில் முட்டை ஒன்றின் விலை 5 காசுகள் உயர்ந்து, 284 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டது.

இதற்கான முடிவு, நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் திங்கள்கிழமை எடுக்கப்பட்டது.

இதுகுறித்து கோழிப் பண்ணையாளர்கள் கூறியது: சபரிமலை சீசன் காரணமாக, முட்டைகள் தேக்கமடைந்ததைத் தொடர்ந்து, கடந்த வாரம் முட்டை ஒன்றின் விலை 15 காசுகள் அளவுக்கு குறைக்கப்பட்டு, 279 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டது.

இப்போது, கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி தமிழகம், கேரளம் மற்றும் வெளி மாநிலங்களில் முட்டையின் பயன்பாடு அதிகரிக்கும் என்பதால் திங்கள்கிழமை முட்டையின் விலை 5 காசுகள் உயர்த்தப்பட்டுள்ளது.

**தீவனப் பயிர் வளாô்ப்பு பயிற்சி**

First Published : 06 Dec 2011 01:25:19 PM IST

பெரம்பலூர், டிச. 5: பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் தரிசு நிலத்தில் தீவனப் பயிர் வளாô்ப்பு குறித்த தொழில்நுட்ப பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

பெரம்பலூர் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் நபார்டு வங்கி, கிரேட் தொண்டு நிறுவனம் சார்பில் நடைபெற்ற இந்தப் பயிற்சி வகுப்பில், தீவனப் பயிர்ப் பராமரிப்பு குறித்து அறிவியல் மையப் பயிர்ப் பாதுகாப்புத் தொழில்நுட்ப வல்லுநர் சி. சங்கர், கால்நடைப் பராமாரிப்பு, தீவனப் பயிர் வளர்ப்பில் புதிய தொழில்நுட்பம் குறித்து மருத்துவர் பி. சிவகுமார், மேய்ச்சல் நிலம் வளாô்ப்பு குறித்து திண்டுக்கல் காந்தி கிராமியப் பல்கலைக் கழகப் பேராசிரியர்

பி. தேவராஜ், தீவனப் பயிர் வளர்ப்பு பராமரிப்பு குறித்து தோட்டக்கலைத் தொழில்நுட்ப வல்லுநர் ஜெ. கதிரவன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

பின்னர், கண்டுணர் சுற்றுலாவுக்காக திருப்பூர் மாவட்டம், தாராபுரம் அருகேயுள்ள நல்லம்பாளையம் பகுதியில் கொரங்காடு மேய்ச்சல் பண்ணை, தீவனப் புல் வகை சாகுபடி குறித்தும், தொழில்நுட்பத்துடன்கூடிய தீவனப் பயிர் சாகுபடி, ஆடு வளா0ப்பு குறித்தும் விவசாயிகளைச் சந்திக்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தப் பயிற்சி வகுப்பில், நபார்டு வங்கி பெரம்பலூர், அரியலூர் மாவட்ட மேலாளர் என். கோதண்டபாணி, மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை விரிவாக்க அலுவலர் முனைவர் அ. அன்பழகன், பெரம்பலூர், அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**சிவகங்கையில் வேளாண் தொழில்நுட்பப் பயிற்சி**

First Published : 06 Dec 2011 11:46:35 AM IST

சிவகங்கை, டிச. 5: பயறு வகைகள் சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்டத்தில் பயறு வகைகளின் உற்பத்தியை பெருக்கும் வகையில், மானாவாரி வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் இந்தப் பயிற்சி நடைபெற்றது.

அட்மா திட்டத்தின் மூலம், ஐடிசி நிறுவனத்தின் வேளாண் வணிகப் பிரிவு இப்பயிற்சியை நடத்தியது.

பயிற்சிக்கு முதன்மை வங்கி மேலாளர் பெருமாள், மானாவாரி வேளாண் ஆராய்ச்சி நிலையத் தலைவர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் தலைமை தாங்கினர்.

பயறு வகைகளில் உள்ள ரகங்கள், காலநிலை, உர நிர்வாகம், ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் மற்றும் இயந்திரங்களைக் கொண்டு பயறு சாகுபடி செய்வது பற்றிய பயிற்சிகள் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டன.

ஐடிசி வேளாண் வணிகப் பிரிவின் மேலாளர் எம்.எஸ். பாட்சா தொகுத்து வழங்கினார். ஐடிசி வேளாண் வணிகப் பிரிவின் வேளாண்மை விரிவாக்க அலுவலர் அருள்குமார் நன்றி கூறினார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 109.02 அடி**

First Published : 06 Dec 2011 01:28:09 PM IST

தஞ்சாவூர், டிச. 5: மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 109.02 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 6,786 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில்

இருந்து வினாடிக்கு 1,225 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. கல்லணையில் இருந்து வினாடிதோறும் காவிரி, வெண்ணாற்றில் தலா 1,000 கன அடி, கல்லணைக் கால்வாயில் 1,011 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. கொள்ளிடத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

**மாம்பழத்துறையாறு தண்ணீரை பி.பி. சானலுக்கு திறக்க கோரிக்கை**

First Published : 06 Dec 2011 02:07:11 PM IST

தக்கலை, டிச. 5: மாம்பழத்துறையாறு அணை நிரம்பி மறுகால் பாய்ந்து தண்ணீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுக்கும் பொருட்டு பி.பி. சானல் வழியாக தண்ணீரைத் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கல்குளம் வட்டம், வில்லுக்குறி ஆனைக்கிடங்கு பகுதியில் மாம்பழத்துறையாறு அணை அமைந்துள்ளது. அணையிலிருந்து மறுகால் வழியாக தண்ணீர் வெளியேறுகிறது என்பதை அறிந்து அணையை மாவட்ட பாசனைத் துறைத் தலைவர் வின்ஸ் ஆன்டோ திங்கள்கிழமை பார்வையிட்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மாம்பழத்துறையாறு அணை நிரம்பி மறுகால் பாய்கிறது. இந்நீரானது வள்ளியாற்றில் கலந்து வீணாகக் கடலுக்குச் செல்கிறது. எனவே இதைத் தடுக்கும்வகையில், அணையின் மதகுகளைத் திறந்து, பி.பி. சானல் வழியாகவே தண்ணீரை விவசாய மேம்பாட்டுக்குத் திறந்துவிட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும், அணையின் மேல்பகுதியில் இயற்கையாக முளம்சல்லி ஓடை நீர்வீழ்ச்சி உள்ளது. இதைக் காண சுற்றுலாப் பயணிகள் வருவதால் அங்குள்ள பாதைகளை சுற்றுலாத் துறையினர் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள்**

First Published : 06 Dec 2011 10:33:54 AM IST

விழுப்புரம், டிச.5: வானூர் பகுதி விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகளை சட்டப்பேரவை உறுப்பினர் ஐ.ஜானகிராமன் வழங்கினார்.

வானூர் அரசு விதைப்பண்ணையில் விவசாயிகளுக்கு மானியத்தில் பவர் டில்லர்கள், களையெடுக்கும் கருவிகள், ரோட்டவேட்டர்கள் வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது. வேளாண்மை இணை இயக்குநர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் முன்னிலை வகித்தார். சட்டப்பேரவை உறுப்பினர் ஐ.ஜானகிராமன் விவசாடிகளுக்கு வேளாண் கருவிகளை வழங்கிச் சிறப்புரையாற்றினார். மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் பக்தவச்சலம், ராஜேந்திரன், ஒன்றியக்குழு துணைத் தலைவர் சாமிநாதன்,

உறுப்பினர் பிரகாஷ், ஊராட்சி மன்றத் தலைவர் கோவிந்தன், காஞ்சனா ராஜாஜி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2011,00:00 IST



**சோளம் சாகுபடி நுட்பங்கள்**

**ரகங்கள்**: "கோ.எஸ்.28':- வயது 100-105 நாட்கள். இறவையில் எக்டருக்கு 4568 கிலோ தானிய விளைச்சல், 126 டன் தட்டை விளைச்சல், குருத்து ஈ, கதிர் பூசண நோய் தாக்குதலை தாங்க வல்லது. திருநெல்வேலி, கடலூர், கோவை, தேனி, தூத்துக்குடி, மதுரை, திருச்சி, நாமக்கல், தர்மபுரி, சேலம் மற்றும் சோளம் பயிரிடும் அனைத்து மாவட்டங்களுக்கும் ஏற்றது.

**கோ.(எஸ்) 30**: வயது 105-110 நாட்கள். தானியம், தீவனத்திற்கேற்ற ரகம். மானாவாரியில் எக்டருக்கு தானிய விளைச்சல் 2780 கிலோ, உலர்தட்டு விளைச்சல் 6220 கிலோ, இறவையில் 3360 கிலோ தானிய விளைச்சல், 9500 கிலோ உலர்தட்டு விளைச்சல், குருத்து ஈ, தண்டு துளைப்பானுக்கு மிதமான எதிர்ப்பு, அடிச்சாம்பல் நோய்க்கு எதிர்ப்புத்தன்மை கொண்டது. மானாவாரி, இறவையில் தமிழகமெங்கும் சாகுபடி செய்ய ஏற்ற ரகம்.

"**டி.என்.ஏ.யு. சோள ஒட்டு கோ.5:** குறைந்த வயது, தானியம் மற்றும் தீவனத்திற்கேற்ற ஒட்டு ரகம். சாயாத தன்மை, மானாவாரியில் எக்டருக்கு 2800 கிலோ தானியம், 7600 கிலோ உலர் தட்டு விளைச்சல்; இறவையில் 4400 கிலோ தானியம், 10,500 கிலோ உலர் தட்டு விளைச்சல் கொடுக்கக்கூடியது. குருத்து ஈ, கதிர் பூசண நோய்க்கு எதிர்ப்புத் தன்மை கொண்டது.
**பருவம்:** சோளம் மானாவாரிப் பயிராக ஜூன் - ஜூலை (ஆடிப்பட்டம்) மற்றும் செப்டம்பர்-அக்டோபர் (புரட்டாசிப்பட்டம்) மாதங்களிலும் இறவையில் ஜனவரி - பிப்ரவரி (தைப்பட்டம்), மார்ச்-ஏப்ரல் (சித்திரைப்பட்டம்) மாதங்களிலும் பயிர்செய்யப்படுகிறது. ஜூன் - ஜூலை பருவத்தில் கோயம்புத்தூர், பெரியார், சேலம், திருச்சி, தென்ஆற்காடு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலும் செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலும் பயிரிடப்படுகிறது.
பொதுவாக சோளம் அகலப்பாத்தி முறையில் பயிரிடப்படுகிறது. 2 மீ x 2 மீ அளவு பாத்திகளில் வரிசைக்கு வரிசை 45 செ.மீ. இடைவெளியும் செடிக்குச் செடி 15 செ.மீ. இடைவெளியும் கொடுக்க வேண்டும். குச்சிகளின் உதவியால் 3 செ.மீ. ஆழத்திற்கு கோடு போட்டு விதைகளை விதைக்க வேண்டும். இறவை சாகுபடிக்கு எக்டருக்கு 10 கிலோ (4கிலோ / ஏக்கர்) விதை போதுமானது.
**விதை கடினப்படுத்துதல்**: ஒரு எக்டருக்குத் தேவையான விதையை 2 சதம் பொட்டாசியம் டை நைட்ரஜன் பாஸ்பேட் என்ற ரசாயனத்தில் 6 மணி நேரம் ஊறவைத்து பிறகு 5 மணி நேரம் நிழலில் உலர்த்த வேண் டும். இவ்வாறு செய்வதால் தானிய விளைச்சல் அதிகரிக்கிறது.
**விதை நேர்த்தி**: ஒரு கிலோ விதையுடன் 2 கிராம் கார்பன்டாசிம் (அ) திரம் கலக்க வேண்டும். குருத்து ஈயைக் கட்டுப்படுத்த குளோர்பைரிபாஸ் 20ஈசி (அ) பாசலோன் 35 இசி (அ) மானோகுரோட்டோபாஸ் 36 டபிள்யூ எஸ்சி மருந்தை ஒரு கிலோவிற்கு 4 மிலி என்ற அளவில் கலக்க வேண்டும். வளரும் பயிர்களுக்கு இயற்கை ஊட்டச்சத்து கிடைக்க ஒரு எக்டருக்குத் தேவையான விதையை 600 கிராம் (3 பாக்கெட்) அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் உரத்தோடு கலந்து விதைக்க வேண்டும்.
விதை விதைத்தவுடன் ஒருமுறை நீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த 3ம் நாள் உயிர் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பிறகு நிலத்தின் தன்மைக்கேற்ப 8-10 நாட்களுக்கு ஒருமுறை நீர் பாசனம் செய்வது அவசியம்.
மானாவாரிப் பயிருக்கு அடியுரமாக ஒரு எக்டருக்கு 12.5 டன் தொழு உரம், 40 கிலோ தழைச்சத்து, 20 கிலோ மணிச்சத்து இடவேண்டும். விதைத்த 30ம் நாள் பயிர் கலைத்து ஒரு களையும், 45ம்

நாள் மற்றொரு களையும் எடுக்க வேண்டும்.

**உர அளவு (எக்டருக்கு):**

*அடியுரம்*:

தொழு உரம் 25 டன்

அசோஸ்பைரில்லம் 2 கிலோ

தழைச்சத்து 50 கிலோ

மணிச்சத்து 50 கிலோ

சாம்பல்சத்து 25 கிலோ.

*மேலுரம்*: 30வது நாள்

தழைச்சத்து 50 கிலோ.

சோளப்பயிரோடு ஊடுபயிராக தட்டைப்பயறு (அ) உளுந்து பயிரிடுவதால் 60 நாட்கள் வரை வயலில் களை இல்லாமல் இருக்கச் செய்யலாம். சோளம் தனியாகப் பயிரிடும்போது அட்ரசின் என்ற களைக்கொல்லி (500 கிராம்/எக்டர்); சோளத்தோடு ஊடுபயிராக உளுந்து பயிரிடும்போது அலகுளோர் என்ற களைக்கொல்லி மருந்தையும் பயன்படுத்தலாம். சோகையோடு ஊடுபயிர் சாகுபடி செய்யும்போது அட்ரசின் பயன்படுத்தலாம். (**தகவல்:**முனைவர் பா.செல்வி, வெ.வீரபத்திரன், சிறுதானியங்கள் துறை, த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003, போன்: 0422-245 0507).-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**திருந்திய நெல் சாகுபடி முறை பரவுகின்றது**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2011,00:00 IST



பெரியார், வைகை பாசனத் திட்டத்தின்கீழ் 1,45,000 ஏக்கர் பரப்பில் மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் நடவு வயல் தயார் செய்துகொண்டு இருக்கின்றனர். கொட்டும் மழையில் விவசாயப் பணிகள் நடந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பள்ள வயல்களில் கழனிகளில் மழைநீர் தேங்கிக் கொண்டு உபரியாக இருப்பதை வடித்து விடுகின்றனர் விவசாயிகள்.

விவசாயிகள் இரண்டாம் போக சாகுபடி செய்ய எடீடி 36, எடீடி 45, எடீடி 16(பெருவெட்டு ரக நெல்) வெள்ளைப்பொன்னி மற்றும் குச்சி நெல் இவைகளை தேர்ந்தெடுத்து நாற்றுக்களை நட்டுக்கொண்டு இருக்கின்றனர். இதில் ஆச்சர்யம் என்னவென்றால் விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையை அனுசரித்துக் கொண்டு இருக்கிறார்கள். முற்போக்கு விவசாயிகள் கூறுவது யாதெனில் இந்த புதிய முறை நெல் சாகுபடி எங்களுக்கு சாகுபடியில் கணிசமான அளவு லாபம் தருவதோடு கூலிஆட்கள் கிடைக்காத பிரச்னையும் இல்லாமல் செய்து விடுகின்றது. விவசாய இலாகா மற்றும் மதுரை வேளாண்மை கல்லூரியில் பணி செய்யும் பேராசிரியர்களும் இப்புதிய முறை பரவ விவசாயிகளை ஊக்குவித்து வருகின்றனர்.

மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் சிவகங்கை மாவட்ட விவசாயிகள் சாகுபடி செலவு ஏக்கருக்கு ரூ.11,000லிருந்து ரூ.12,000 வரை செய்கிறார்கள். 32 மூடை நெல் மகசூல் எடுக்கிறார்கள். ஒரு மூடை நெல் விலை ரூ.650/-. 32 மூடை மகசூல் எடுக்கின்றனர். இதன் மதிப்பு ரூ.20,800. சாகுபடி செலவு ரூ.11,000 போக ரூ.9,800லிருந்து ரூ.10,000 வரை லாபம் எடுக்கிறார்கள்.

வறட்சி பகுதியான ராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்களில் ஏக்கரில் 25 மூடை மகசூல் எடுத்து வந்தார்கள். தற்போது இந்த விவசாயிகள் வரும் பட்டத்தில் 32 மூடை மகசூல் எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது பெய்யக்கூடிய மழை சூழ்நிலையில் விவசாயிகள் தங்கள் பணியை சந்தோஷமாக செய்வது குறிப்பிடத்தக்கது. முற்போக்கு விவசாயிகள் தற்போது தங்களது அனுபவத்தின் அடிப்படையில் திருந்திய நெல் சாகுபடியில் கீழ்க்கண்ட நன்மைகளையும் தெரிந்து கொண்டனர்.

* உற்பத்தி செலவு சற்று குறைகின்றது.

* ஜனப்பெருக்கம் அதிகரித்து வரும் சூழ்நிலையில் நெல் உற்பத்தியை பன்மடங்கு அதிகரிக்க புதிய முறை உதவுகின்றது.

* சாதாரண நீர் பாசன முறையைவிட புதிய முறை சாகுபடியில் தேவைப்பட்ட பாசனம் பாதியளவுதான்.

* புதிய முறையில் மண்ணில் காற்றோட்டம் அதிகரித்து வேர் வளர்ச்சியும் கணிசமான அளவு அதிகரித்து நெல் மகசூல் அதிகரிக்கின்றது.

மதுரைப்பகுதியில் இந்த இரண்டாம் போகத்தில் 100 நாட்கள் வயதுடைய குச்சி நெல் என்று அழைக்கப்படும் ஜே13 நெல்லினையும் சாகுபடி செய்துள்ளனர். இதன் சாகுபடிக்கு குறைந்த செலவே ஆகின்றது.

சாகுபடிக்கு ஒரு சென்ட் நாற்றங்கால் செலவே ஆகின்றது. நாற்றங்காலுக்கு 100 கிலோ மக்கிய தொழு உரம் இடப்படுகின்றது. இதோடு 2 கிலோ டிஏபி உரம் இட்டு உழவு செய்யப்படுகின்றது. விதை நெல் நாற்றங்காலில் டிசம்பரில் விதைக்கப்படுகின்றது. நடவு வயலுக்கு இரண்டு ட்ரெய்லர் லோடு தொழு உரம் இடப்படுகின்றது. கடைசி உழவில் 17:17:17 காம்ப்ளக்ஸ் உரம் ஒரு மூடை 50 கிலோ இடப்படுகின்றது.

பரம்படிக்கும்போது வயலில் இரண்டரை கிலோ நுண்ணூட்டச்சத்துக்கள் மணலுடன் கலந்து நடவு வயலில் தூவப்படுகின்றது. நடவு வயலில் ""ரீபீட்" என்ற களைக்கொல்லி 250 மில்லி மணலுடன் கலந்து 50 சென்ட் பரப்பில் இடப்படுகின்றது. பயிர் நடவு செய்த 10ம் நாள் யூரியா 10 கிலோ, யூரியாவுடன் இரண்டு கிலோ வேப்பம் பிண்ணாக்கு கலந்து இடப்படுகின்றது. 99 நாட்களாக பயிரின் வயது இருக்கும்போது (சாகுபடி பரப்பு 50 சென்ட்) அறுவடை செய்யப்பட்டது. அறுவடையில் 50 சென்ட் பரப்பில் (அரை ஏக்கர்) 17 மூடை மகசூல் கிடைத்தது. நெல்லின் மதிப்பு ரூ.10,200.

சாகுபடி செலவு ரூ.3,735. அரை ஏக்கரில் லாபம் ரூ.6,465. ஜே-13 சாகுபடியில் செலவு குறைவு. அரிசி சன்னமாக இருக்கும். புழுங்கல் அரிசி இட்லி செய்ய ஏற்றது. நெல் பொரி செய்வதற்கு ஏற்றது. வைக்கோல் விற்பனையிலும் வருவாய் உண்டு. விவசாயிகள் விஞ்ஞான தொழில் நுட்பங்களை அனுசரித்தால் எக்காலத்திலும் நன்மை
பெறலாம்.-எஸ்.எஸ்.நாகராஜன்.

### 10 ஆயிரம் ஏக்கர் விவசாயம் பாதிக்கும்: 50 கிராம விவசாயிகள் முதல்வருக்கு மனு

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2011,02:43 IST

கடலூர் : பெருமாள் ஏரியிலிருந்து தனியார் நிறுவனத்திற்கு தண்ணீர் கொண்டும் செல்லும் திட்டத்தை கைவிட வேண்டும் என தமிழக முதல்வருக்கு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளன.கடலூர் அடுத்த குண்டியமல்லூரில் கடந்த 12ம் நூற்றாண்டில் பராந்தக சோழ மன்னரால் 16 கி.மீ., நீளத்திற்கும் ஒரு கி.மீ., அகலத்திற்கு வெட்டப்பட்ட பெருமாள் ஏரி மூலம் சுற்று வட்டாரத்தில் உள்ள 50 கிராமங்களைச் சேர்ந்த 10 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெற்று வருகிறது.மாவட்டத்தின் பெரிய ஏரிகளில் ஒன்றான இந்த ஏரி, கடந்த 50 ஆண்டுகளாக என்.எல்.சி., நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்படும் நீரில் அடித்து வரும் மணல் மற்றும் நிலக்கரி சகட்டினால் 8 கி.மீ., அளவிற்கு தூர்ந்து விட்டதால் தற்போது ஒரு போகம் நெல் பயிரிடவே தண்ணீர் தட்டுப்பாடாக உள்ளது. இதனால் ஏரியை தூர் வாரி கொள்ளளவை உயர்த்த வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.இந்நிலையில் திருச்சோபுரத்தில் செயல்படவுள்ள நாகார்ஜுனா ஆயில் நிறுவனம், தங்களது தண்ணீர் தேவைக்கு பெருமாள் ஏரியிலிருந்து தினசரி 1.8 மில்லியன் காலன் (ஒன்றரை கோடி லிட்டர்) தண்ணீரை குழாய் மூலம்

எடுத்துச் செல்ல பொதுப்பணித்துறையிடம் அனுமதி கோரியுள்ளது.அதன்பேரில், குறிஞ்சிப்பாடி தாசில்தார் கடந்த 24ம் தேதி அறிவிப்பு வெளியிட்டுள்ளார். விவசாய பாசனத்திற்கு பயன்பட்டு வரும் பெருமாள் ஏரியிலிருந்து, நாகார்ஜுனா ஆயில் நிறுவனம் தண்ணீர் எடுத்துச் செல்ல அனுமதித்தால், 50 கிராமங்களில் 10 ஆயிரம் ஏக்கரில் நடைபெற்று வரும் விவசாயம் பாதிக்கும்.நாகார்ஜுனா ஆயில் நிறுவனம், கடல் நீரை பயன்படுத்தப் போவதாக கூறியது. அதற்கு கூடுதல் செலவாகும் என்பதால் தற்போது, விவசாய பாசனத்திற்கு பயன்பட்டு வரும் பெருமாள் ஏரியிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்ல முயல்கிறது. இதுகுறித்து தெளிவான அறிவிப்பும் இல்லை.இப்பகுதியில் ராட்சத போர்வெல் மூலம் தண்ணீர் எடுத்தாலும், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைவதோடு, கடல் நீரும் உட்புகும். இப்பகுதி விளை நிலங்கள் உவர் தன்மையடைந்து தரிசு நிலமாகுவதோடு 50 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.எனவே, இத்திட்டத்தை உடனடியாக தடுத்து நிறுத்துவதோடு, மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளப் பாதிப்பை தவிர்க்க ஏரியை ஆழப்படுத்தவும், பரவனாற்றிலிருந்து கடலுக்கு நேரடியாக 2 கி.மீ., தூரத்திற்கு சிறிய ஆறு வெட்டித் தர வலியுறுத்தி பெருமாள் ஏரி நீர்ப்பாசன விவசாயிகள் சங்கச் செயலர் சண்முகம், தலைவர் பாஸ்கரன், தாய் மண் விவசாய - மீனவ ஜீவாதார நலச் சங்க செயலர் கிருஷ்ணமூர்த்தி, தலைவர் ராமசாமி மற்றும் நிர்வாகிகள் கூட்டாக தமிழக முதல்வர், அமைச்சர்கள் சம்பத், செல்வி ராமஜெயம், எம்.எல்.ஏ., ராஜேந்திரன், தலைமைச் செயலர், கலெக்டர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் மனு அனுப்பியுள்ளனர்

**பருத்தியில் இலை கருகல் நோய் தடுக்கும் வழி முறை அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2011,03:53 IST

கருத்தை பதிவு செய்ய

பெரம்பலூர்: "பெரம்பலூர் வேளாண் இணை இயக்குநர் சிவக்குமார் வெளியிட்ட அறிக்கை:பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ள பகுதிகளில் மழைக்குப்பின் பருத்தியில் பூச்சி நோய் தாக்குதல் பற்றி வயல் ஆய்வு செய்யப்பட்டது. தற்சமயம் பருத்தி பயிர் காய்ப்பருவத்தில் உள்ளது. தண்ணீர் தேங்கிய மற்றும் ஈரம் அதிகமாக உள்ள வயல்களில் நுண்சத்து பற்றாக்குறை காணப்படுகிறது. நுண்சத்து பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்ட செடிகளின் இலைகள் சிவப்பு நிறமாகவும், செடிகள் பசுமை தன்மை இழுந்தும் காணப்படும். இதனைக்கட்டுப்படுத்துவதற்கு ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் மெக்னீசியம் சல்பேட் மற்றும் 5 கிராம் சிங்சல்பேட் நுண்ணூட்ட உரத்தினை கலந்து தெளிக்க வேண்டும்.தற்பொழுது காற்றில் ஈரப்பதம் அதிகமாக உள்ளதால் நுண்கிருமிகள் அதிகமாக

உற்பத்தியாகி செடியில் நோயினை உண்டுபண்ணும். தற்சமயம் பருத்தி செடியில் பாக்டீரியல் இலைக்கருகல் நோய் பரவலாக காணப்படுகிறது.

இந்நோய் செடியின் இலைப்பகுதி, நரம்புபகுதி மற்றும் காய் என அனைத்து பகுதியிலும் காணப்படும். இந்நோயினால் தாக்கப்பட்ட இலைகளின் அடிப்பாகத்தில் பனித் திவலைகள் சூழ ஒழுங்கற்ற வடிவத்தில் கரும்புள்ளிகள் காணப்படும். இந்த புள்ளிகள் ஒன்று சேர்ந்து இலை மஞ்சள் நிறமாகி காய்ந்துவிடும். இந்த நோயினை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு காப்பர் ஆக்ஸிகுளோரைடு ஒரு கிலோவுடன் பாக்டீரிமைசின் 80 கிராமினை கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். விவசாயிகள் பயிர் பாதுகாப்பு நடவடிக்கையினை கடைபிடித்து பருத்தியில் அதிக மகசூல் பெற்று பயன்பெறலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**கால்நடைகளை தாக்கும் கழிச்சல் நோய்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2011,03:12 IST

ஆத்தூர்:ஆத்தூர் பகுதியில் கால்நடைகளுக்கு, மர்ம நோய் தாக்கி, 150க்கும் மேற்பட்ட ஆடுகள் இறந்துள்ளதால், கால்நடை வளர்ப்பு விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.சேலம் மாவட்டத்தில், ஆத்தூர், தலைவாசல், வீரகனூர், கெங்கவல்லி, பெத்தநாயக்கன்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில், விவசாயம் பிரதான தொழிலாகவும், கால்நடை வளர்ப்பு உபதொழிலாகவும் இருந்து வருகிறது.விவசாயிகள் வெள்ளாடு, ஜமுனாபாரி, செம்மறி, குரும்பாடு, மலை ஆடு, மேச்சேரி, தலச்சேரி, போயர் போன்ற இன ஆடுகளையும், சிந்து, சர்ச், பிர்ஷியன், நாட்டு வகை கறவை மாடுகள், 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டவை வளர்த்து வருகின்றனர்.தற்போது மேய்ச்சலுக்கு சென்று திரும்பும் ஆடுகள் மற்றும் கன்றுகள் கழிச்சல் நோய் தாக்கி இறந்து வருகின்றன. மூன்று மாதம் வரையுள்ள ஆட்டு குட்டிகளை கழிச்சல் நோய் தாக்குகிறது. ஆத்தூர் சுற்றுவட்டார பகுதிகளில் மட்டும், 150க்கும் மேற்பட்ட ஆட்டு குட்டிகள் இறந்துள்ளதால், கால்நடை விவசாயிகள் பெரிதும் கலக்கமடைந்துள்ளனர்.மேலும், கோமாரி நோய் அறிகுறியும் காணப்படுவதால், மாவட்ட நிர்வாகம் மற்றும் கால்நடைத்துறை மருத்துவர்கள், நோய் தாக்கம் ஏற்படும் பகுதியில் முகாமிட்டு மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும் என, கால்நடை விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுகுறித்து மருத்துவ அலுவலர் ஒருவர் கூறியதாவது:ஏரி, குளம் உள்ளிட்ட நீர் நிலைகளில், தொழிற்சாலை கழிவுகள் கலப்பதால், தட்டை புழுக்கள் அதிகளவில் உற்பத்தியாகி வருகிறது. கழிவு நீர் கலக்கும் நீர் நிலைகளில், ஆடு மற்றும் மாடுகள் தண்ணீர் குடிக்கும்போது, தட்டை

புழுக்கள் ரத்த குழாய் வழியாக கல்லீரலுக்குள் சென்று விடுகிறது. சில நாட்களில் கால்நடைகளின் தாடை, கழுத்து பகுதிகளில் வீக்கம், கழிச்சல் ஏற்பட்டு எடை குறையும். பிறகு, சாணம், சிறுநீர் உள்ளிட்ட கழிவுகளை வெளியேற்ற முடியாமல், கால்நடைகள் இறந்து விடும்.புதிய புற்களை மேய்வதால், மூன்று மாத வரையுள்ள ஆட்டு குட்டிகளுக்கு கழிச்சல் ஏற்படுகிறது. மூன்று மாத ஆட்டு குட்டிகளை, மேய்ச்சலுக்கு கொண்டு செல்லாமல் பட்டிகளில் அடைத்து தண்ணீர், தீவனம் கொடுக்க வேண்டும்.மழை காலத்தில் ஆடு, மாடுகளுக்கு நோய் தாக்காமல் இருக்க தடுப்பூசிகளை போட்டுக் கொள்ள வேண்டும். கழிவு நீர் கலந்துள்ள ஏரிகளில் ஆடு, மாடுகளை தண்ணீர் குடிக்க வைக்க கூடாது.இவ்வாறு அவர் கூறினார்.

**போதுமான மழை பெய்தும் தேவையான உரம் இல்லையே**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2011,02:56 IST

கருத்தை பதிவு செய்ய

செய்துங்கநல்லூர் : - விவசாயத்திற்கு தேவையான உரம் கிடைக்காததால் விவசாயிகள் சிரமமடைந்துள்ளனர்.நாட்டின் மக்கள் தொகை பெருக்கத்தால் அதிக அளவு உணவுத் தானியம் உற்பத்தி செய்ய வேண்டும் என விவசாயிகள் இயற்கை உரத்தை விட்டு ரசாயன உரத்தை பயன்படுத்த துவங்கினர். பின்னர் அந்த உரம் இல்லாமல் விவசாயம் செய்ய முடியாது என்ற நிலைக்கு ஆளாகினர். இதனால் நாட்டில் ஸாக், பேக்ட், இப்கோ, எம்.எப்.எல்.கோரமண்டல் போன்ற ரசாயன உரக் கம்பெனிகள் துவங்கப்பட்டன. இவைகள் விவசாயிகளுக்கு தேவையான டி.ஏ.பி, யூரியா, பொட்டாஷ், காம்பிளக்ஸ் போன்ற உரங்களை தயாரித்து வந்தன. இருப்பினும் அரசு உரக் கொள்கையை தன் வசம் வைத்துக் கொண்டு உரத்திற்கு விலை நிர்ணயம் செய்வது, உற்பத்தி அளவு, உரத்தின் தரம் போன்றவற்றை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. எனவே உரத்திற்கு விலை நிர்ணயம் செய்யும் போது அதற்கான ராமெட்டிரியலும் எளிதில் குறைந்த விலையில் கம்பெனிக்கு கிடைக்க வழி செய்தது. மேலும் உற்பத்தியில் அரசு மானியம் அளித்து குறைந்த விலையில் விவசாயிகளுக்கு உரத்தை விற்பனை செய்து வந்தது. தற்போது இந்த உரம் தட்டுப்பாடாக உள்ளதோடு அதிக விலைக்கும் விற்கப்படுகிறது. இதுகுறித்து யூனியன் கவுன்சிலரும், விவசாயுமான கணேசன் கூறுகையில், இதுவரை யூரியா, காம்பிளக்ஸ், டி.ஏ.பி.போன்ற உரங்கள் எளிதாகவும், விலை குறைவாகவும் கிடைத்துக் கொண்டிருந்தது. ஆனால் இப்போது அதிகவிலை கொடுத்தாலும் உரம் கிடைப்பது இல்லை. தட்டுப்பாடாகவே உள்ளது. ரேஷன் போல் குறிப்பிட்ட அளவே கிடைக்கிறது. இப்போது அடியுரம் போட்டுள்ளோம். இனி மேலுரம் இரண்டு முறையிட வேண்டிய நிலையில் உள்ளோம். அதற்கு தேவையான உரம் கிடைக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை. எங்கள் பகுதியில் யூரியா மூடை ரூ.450க்கும்,

பொட்டாஷ் மூடை ரூ.650க்கும், டி.ஏ.பி.,மூடை ரூ.1000 முதல் 1200 வரையிலும் கலப்பு என்ற உரம் ரூ.240 க்கும் விற்கப்படுகிறது. இந்த விலை என்னைப் போல் மட்டும் உள்ளவர்களுக்கு மட்டும் தான். ஆனால் சாதாரண விவசாயிகளுக்கு இதைவிட அதிகமாக விற்கப்படுகிறது. இந்நிலை ஏற்பட்டால் விவசாயம் செய்ய முடியாமல் போய்விடும். அரசு உடனே தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தனியார் வியாபாரிகள் லாப நோக்குடன் எங்கிருந்தாவது மூடைகளை கொண்டு வந்து விடுகின்றனர். வசதி படைத்த விவசாயிகள் கூடுதல் பணம் கொடுத்து உரங்களை வாங்கி விடலாம். ஆனால் ஏழை விவசாயிகளின் நிலை என்ன என்பதை மத்திய, மாநில அரசுகள் ஆலோசிக்க வேண்டும் இவ்வாறு கூறினார். இந்த உரங்களை தனியார் கடைகளில் அதிக விலைக்கு விற்கப்படுகிறது என்று கூறும் விவசாயிகள் அது டியூப்பிளிகேட் என்றால் என்ன செய்வது என்று விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதுகுறித்து அரசு அதிகாரி ஒருவரிடம் கேட்ட போது அவர் கூறியதாவது, விவசாயம் என்பது நாட்டின் முக்கிய விஷயம் ஆகும். அதை செய்து வரும் விவசாயிகள் பெரும் சிரம்மத்திற்குள்ளாகின்றனர். முதலில் விவசாயத்திற்கு தண்ணீர் இல்லாமல் சிரமப்பட்டனர்.இப்போது மழை நன்றாக பெய்துள்ளது. இந்த ஆண்டிற்கு தேவையான மழை பெய்துள்ளது. இன்னும் பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த முக்கிய விஷயங்களாக கருதப்படுவது இடுபொருள் மார்க்கெட்டிங் ஆகும். இந்த இடு உரங்களும் இப்போது விவசாயிகளை பெரிதும் பாதித்துள்ளது. ரசாயண உரங்களை பொருத்தவரை யூரியா என்பது பயிரின் வளர்ச்சிக்கு தேவையானது. மற்ற உரங்கள் பூச்சி தாக்குதல், பச்சையம் கிடைத்தல் போன்ற காரியங்களுக்கு பயன்படுகிறது. இவ்வுரங்களை அதிகம் இட்டாலும் பிரச்னை, குறைவாக பயிரில் இட வேண்டும். அதற்கு தகுந்தாற்போல் உரங்களை தயாரித்து தர வேண்டும். இதுவரை அரசு உரக் கம்பெனிகளின் உற்பத்தி விலை முறையும், விற்பனை விலையும் கையில் வைத்திருந்தது. ஆனால் இப்போது யூரியாவை மட்டுமே வைத்துக் கொண்டு மற்ற உரங்களின் உற்பத்தி மற்றும் விற்பனை விலைகளை கம்பெனிகளின் விருப்பத்திற்கு கொடுத்து விட்டது.இதனால் உரத்தின் விலை அதிகமாகிறது. அதே நேரத்தில் கம்பெனிகளுக்கு கொடுக்கும் அரசு மானியத்தை கொடுத்து வருகிறது. முன்பு உரம் தயாரிக்கும் ராமெட்டிரியல் விலைக்கு ஏற்ப அரசு மானியம் இருந்தது. இப்போது அரசு மானியம் ஒரே நிலையில் வைத்துக் கொள்வதால் கம்பெனிகள் ராமெட்டிரியல் விலைக்கு ஏற்றாற் போல் உரத்தின் விலையை உயர்த்தி விடுகின்றனர். உற்பத்தியும் குறைந்து விடுகின்றன. அதனால் தான் தட்டுப்பாடு, விலை உயர்வு என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இன்றைய நிலை வாங்குவோர் திறன் அதிகம் உள்ளதால் மற்ற பொருட்களை எவ்வளவு விலை என்றாலும் மக்கள் கொடுத்து வாங்கி விடுகின்றனர். ஆனால் விவசாயி மட்டும் அதிக விலை கொடுத்து உரம், விதை, பூச்சி மருந்து போன்றவற்றை வாங்குவது இல்லை. அதற்கு காரணம் மார்க்கெட்டிங் தான். பயிரின் உற்பத்தி நிலை உயர்ந்தது தான் காரணம். எடுத்துக்காட்டாக நெல் பயிரை பொறுத்த வரை அரசு இன்று அறிவித்துள்ள கொள்முதல் விலை சன்னரகம் குவிண்டலுக்கு ரூ.1180 ஆகும்.

மோட்டா ரகம் குவிண்டலுக்கு ரூ.1130 ஆகும். தனியாரிடம் விற்பனை செய்தால் அதிக எடைக்கு இதைவிட குறைவான விலைக்கே நெல்லை விற்க முடிகிறது. கோதுமைக்கும் இதே நிலை தான். எனவே அரசு இந்த விஷயத்தில் தலையிட்டு நெல் கொள்முதல் விலையை குவிண்டலுக்கு ரூ.2 ஆயிரத்து 500 ஆகும் என்று நிர்ணயிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் தான் இன்றைய நிலையில் உரம் மற்றும் இடுபொருட்களின் விலை உயர்வாலும் அதை எதிர்நோக்க விவசாயி தயாராவான் என்பது மறுக்க முடியாத கருத்தாகும். பணப் பயிர்களின் மார்க்கெட் பரவாயில்லை என்று சொன்னாலும் தானியப் பயிர்களான சோளம், கம்பு, கேப்பை போன்றவற்றின் கொள்முதல் விலையும் குறைவாகவே உள்ளது இவ்வாறு கூறினார். அரசின் தாரளமயமாக்கப்பட்ட கொ ள்கை விவசாயத்திற்குள் கடந்த இரண்டு ஆண்டுகளாக புகுந்துள்ளது. எனவே உரக் கம்பெனிகளும் இக்கொள்கையின் கீழ் செயல்படுவதால் அது உரவிலையை நிர்ணயம் செய்கிறது. தன் உற்பத்தியையும் தேவைக்கேற்ப பெருக்கலாம் என்ற நிலைக்கு வந்து விட்டது. இதுகுறித்து கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரி உழவியல் பேராசிரியர் ஒருவரிடம் கேட்டபோது உரம் விலைக்கு அரசுதான் காரணம். உரக் கம்பெனிகள் தன்னிச்சையாக உற்பத்தி செய்வது தான் விலை ஏற்றம் மற்றும் தட்டுப்பாட்டிற்கு காரணம். மனிதனுக்கு சோறு எவ்வளவு முக்கியமோ அது போன்று பயிறுக்கு தன் வளர்ச்சிக்கு யூரியா முக்கியம். மனிதனுக்கு சோறு போக மீதமுள்ள உணவு பொருட்களைப் போல பயிறுக்கு மற்ற உரங்கள் ஆகும். சோறு இல்லையென்றால் மனிதன் பிழைக்கமாட்டான். அதுபோல யூரியா இல்லை என்றால் பயிர் வளராது. எனவே தான் யூரியா உரக் கட்டுப்பாட்டை மட்டுமே அரசு தன்வசம் வைத்துக் கொண்டு மற்ற உரக்கட்டுப்பாட்டை அரசு கைவிட்டுவிட்டது. உரத்தட்டுப்பாடு விலையேற்றத்திற்கு அரசு தான் முழுக் காரணம் ஆகும் இவ்வாறு கூறினார்

**மழையால் அவரை விவசாயம் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2011,23:46 IST

கருத்தை பதிவு செய்ய

சாணார்பட்டி:சாணார்பட்டி ஒன்றியப்பகுதிகளில் தொடர் மழையால் அவரை விவசாயம் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. சாணார்பட்டி ஒன்றியத்தில் வடக்காட்டுபட்டி, தவசிமேடை, நொச்சியோடைப்பட்டி, புகையிலைப்பட்டி, கொசவப்பட்டி உட்பட பல பகுதி களில் 100 ஏக்கர் வரை அவரைக் கொடி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த விவசாயம் ஓராண்டு வரை மகசூல் தரக்கூடியது. ஆடி மாதத்தில் நடவு செய்யப்பட்டு நான்காவது மாதமான ஐப்பசியிலிருந்து அறுவடை செய்யப்படுகிறது.

தொடர்ந்து மூன்றாண்டுகளாக இப்பகுதிகளில் போதிய மழையில்லாததால் அவரை விவசாயம் திருப்திகரமாக இல்லை. இதனால் விவசாயிகள் செலவு தொகையைக்கூட எடுக்க முடியாதநிலை இருந்தது. இந்த ஆண்டு பலன் தரக்கூடிய நேரத்தில் அளவுக்கு அதிகமான மழையால், அவரைக்கொடி பாத்திகளில் மழைநீர் தேங்கி கொடிகளின் வேர்கள் அழுகி பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. தற்போது அவரைக்காய் கிலோ 15 முதல் 30 ரூபாய் வரை விற்கிறது. விற்றபோதும் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகம் சாணார்பட்டி பகுதி அவரை விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மானிய விலையில் உரம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2011,22:40 IST

கீழக்கரை:திருப்புல்லாணி வேளாண் உதவி இயக்குனர் கமாலுதீன் கூறியதாவது: திருப்புல்லாணியில் நடப்பாண்டில் 4900 எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பயிர் வளர்ச்சிக்கும்,மண்ணில் சத்து குறைப்பாட்டை நீக்கவும் சிங்க் சல்பேட் மற்றும் நெல் நுண்ணாட்டம் 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். வேளாண் விரிவாக்க மையங்களில் நுண்ணூட்ட உரங்களை பெறலாம், என்றார்.

**அரசு தோட்டக்கலை பண்ணையில் "மா' ஒட்டு செடிகள்: விவசாயிகளுக்கு இலவசம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2011,22:18 IST

கருத்தை பதிவு செய்ய

காரைக்குடி:நேமம், அரசு தோட்டக்கலை பண்ணையில் மென் தண்டு ஒட்டு முறையில் (ஹைபிரீட்) மா, முந்திரி ரக செடிகள் பனிக்கூடாரத்தில் வைத்து வளர்க்கப்பட்டு வருகின்றன.சிவகங்கை மாவட்டம் குன்றக்குடி அருகேயுள்ள நேமத்தில் அரசு தோக்கட்டக்கலை பண்ணையில், தேசிய தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மூங்கில் (டென்ரா கலாமஸ் டிரக்டாஸ்), மா, முந்திரி, எலுமிச்சை, சவுக்கு, கொய்யா, பப்பாளி, மல்லிகை மற்றும் "குரோட்டன்ஸ்' செடிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பழ வகை செடிகள் மென் தண்டு ஒட்டு முறையில் (ஹைபிரீட்) பனி கூடாரத்தில் வைத்து வளர்க்கப்பட்டு வருகின்றன.

இம்முறையில் மிதமான வெப்பநிலை நிலவுவதால் கன்றுகள் ஒரு மாதம் வரை இங்கு வைக்கப்படுகிறது. கோ-2, ரக பப்பாளி ரகம் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், இங்கு உற்பத்தியாகும் செடிகள் களப்பணியாளர்கள் மூலம் சிவகங்கை மாவட்டத்திலுள்ள சாக்கோட்டை, கல்லல், காளையார்கோவில், திருப்புத்தூர், சிங்கம்புணரி, எஸ்.புதூர் ஒன்றிய பகுதி விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. தோட்டக்கலை அலுவலர் எஸ்.பி., தியாகராஜன் கூறுகையில், " வறட்சிக்கு இலக்காக்கும் பகுதி திட்டத்தின் கீழ் 1981ல் இப்பண்ணை துவக்கப்பட்டது. தோட்டக்கலை துறை கட்டுப்பாட்டில் உள்ளது. ராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை விவசாயிகளுக்கு இங்கிருந்து பல லட்சம் மரக்கன்றுகள், பழச்செடிகள் அனுப்பப்படுகின்றன' என்றார்.

**உழவர் சந்தையில் காய்கறி விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2011,03:32 IST

தர்மபுரி: தர்மபுரி உழவர் சந்தையில் சமீப காலமாக வார சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறி விற்பனையை விட கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுவதால், நுகர்வோர் பாதிப்படைந்துள்ளனர்.தர்மபுரி உழவர் சந்தையில் தினம் ஆயிரக்கணக்கான நுகர்வோர்கள் காய்களிகளை தங்கள் வீடுகளுக்கு கொள்முதல் செய்து வருகின்றனர். சந்தையில் 70க்கும் மேற்பட்ட விவசாயிகள் தினம் காய்கறிகளை விற்பனை செய்து வருகின்றனர். தினசரி வெளி மார்க்கெட் காய்கறிகள் விலையை கணக்கீடு செய்து, அதன் அடிப்படையில் 2 ரூபாய் முதல் நான்கு ரூபாய் வரையில் உழவர் சந்தையில் குறைந்த விலைகள் காய்கறிகளுக்கு நிர்ணயம் செய்யப்படும்.

சில நேரங்களில் காய்கறி உற்பத்தி, சந்தைக்கு வரும் காய்கறிகளின் வரவை வைத்து விலையில் ஏற்ற, இறக்கம் இருக்கும். வெளி மார்க்கெட்டை விட உழவர் சந்தையில் விலை குறைவாகவும், தினம் பறிக்கப்பட்ட காய்கறிகள் கிடைப்பதால், நகரின் பல்வேறு பகுதியில் இருந்தும் பொது மக்கள் அதிக அளவில் சந்தையில் காய்கறிகள் வாங்க வருவர்.உழவர் சந்தை போல் வாரம் தோறும் ஞாயிற்று கிழமைகளில் சந்தை பேட்டை பகுதியில் உள்ள சந்தை மற்ம் சாலையோரங்களிலும், திருப்பத்தூர் சாலையிலும், கடை வீதி பகுதியிலும் விவசாயிகள்,

வியாபாரிகள் காய்கறிகள் விற்பனைக்கு குவித்து வைத்து விற்பர்.வார சந்தையிலும் விவசாயிகள் நேரடியாக விற்பனை செய்வதால், உழவர் சந்தை போல் விலை குறைவாக கிடைக்கும். பெரும்பாலும் உழவர் சந்தை விலைக்கு வார சந்தையில் காய்கறிகள் விலை இருக்கும். சமீப காலமாக வார சந்தையை விட உழவர் சந்தையில் காய்கறிகள் விலை ஏறுமுகமாக உள்ளது.மேலும் உழவர் சந்தையில் வைக்கப்படும் காய்கறிகளில் தரம் பிரிக்கப்பட்டு ஒன்று, இரண்டாவது ரகம் என விலை நிர்ணயம் செய்யப்படுவது உண்டு. சமீப காலமாக தரம் பிரிக்கப்படாமல் காய்கறிகள் விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

குறிப்பாக தற்போது சின்ன வெங்காயம் விலை அதிகரித்த நிலையில் உழவர் சந்தையில் தரம் பிரிக்கப்படாமல் வெங்காயம் விலை கிலோ 20 ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில், உலர்ந்த வெங்காயத்துக்கும், ஈரப்பதம் உள்ள வெங்காயத்துக்கும் இதே விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.வார சந்தையிலும் இதே விலையில் வெங்காயம் விற்பனை செய்யப்படுவது குறிப்பிட தக்கது. அதே போல் பெரிய வெங்காயம் வார சந்தை மற்றும் வெளி மார்க்கெட்டில் கிலோ 14 ரூபாய்க்கு விற்பனை செய்யும் நிலையில் உழவர் சந்தையில் 16 ரூபாய்க்கும், பூண்டு வெளி மார்க்கெட்டில் 100 ரூபாய் விற்பனை செய்யும் நிலையில், உழவர் சந்தையில் 116 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.தக்காளி வார சந்தை மற்றும் வெளி மார்க்கெட்டில் கிலோ 10 ரூபாய்க்கு விற்பனை செய்யும் நிலையில் உழவர் சந்தையில் கிலோ 12 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதே போல் உழவர் சந்தையில் பல விவசாயிகள் வாழைப்பூ, தண்டு, பப்பாளி, சப்போட்டா உள்ளிட்டவைகள் நடைபாதையில் விற்பனை செய்கின்றனர். இவர்கள் விற்பனை செய்யும் பொருட்களுக்கு விலை அறிவிப்பு கிடையாது.இதனால், நினைத்து விலையை நிர்ணயம் செய்து விவசாயிகள் விற்பனை செய்வது நடந்து வருகிறது. சமீப காலமாக வார சந்தையை விட உழவர் சந்தையில் விலை அதிகம் இருப்பதால், நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட நிர்வாகம் இது குறித்து ஆய்வு செய்து வெளிமார்க்கெட்டை விட குறைந்த விலையை நிர்ணயம் செய்து காய்கறிகள் விற்பனை செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

**தோட்டக்கலை விவசாயிகள்சங்க செயற்குழு கூட்டம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 07,2011,02:44 IST

காவேரிப்பட்டணம்:காவேரிப்பட்டணத்தில் தமிழ்நாடு தோட்டக்கலை விவசாயிகள் சங்க சேலம் கோட்ட செயற்குழு கூட்டம் நடந்தது.கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் ராஜேஸ்குமார் தலைமை வகித்தார். துணை தலைவர் ராஜா முன்னிலை வகித்தார். மாநில தலைவர் கிருஷ்ணன்

தீர்மானங்கள் குறித்து பேசினார். தொடர்ந்து நிர்வாகிகள் தேர்வு நடந்தது.சேலம் மாவட்ட தலைவராக சம்பத், தர்மபுரி மாவட்ட துணை தலைவராக சின்னவன், பர்கூர் ஒன்றிய தலைவராக பாரதி, கிருஷ்ணகிரி மாவட்ட துணை தலைவராக திம்மராய கவுண்டர், காவேரிப்பட்டணம் ஒன்றிய தலைவராக காவேரி, காரிமங்கலம் ஒன்றிய தலைவராக சிவலிங்கம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

"நடப்பாண்டில் மா அறுவடைக்கு முன் மா விலை நிர்ணய கமிட்டியை அமைக்க வேண்டும். கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு 3 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும். தென்னையில் ஏற்பட்டுள்ள ஈரியோஃபைட் நோயை கட்டுப்படுத்த வேண்டும். காவேரிப்பட்டணம் தென்பெண்ணை ஆற்றில் கொட்டப்பட்டுள்ள கழிவுகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அறிவிக்கப்படாத மின் வெட்டை சரி செய்ய வேண்டும். பஸ் கட்டண உயர்வை தமிழக அரசு திரும்ப பெற வேண்டும்' உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றினர்.தர்மபுரி, சேலம், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களை சேர்ந்த நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

**வேளாண் கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு நடப்பாண்டில் 67 லட்ச ரூபாய் ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2011,04:19 IST

கருத்தை பதிவு செய்ய

தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின்கீழ், வேளாண் கருவிகள் வாங்குபவர்களுக்கு மானியம் அளிப்பதற்காக, திருவள்ளூர் மாவட்டத்திற்கு, 67.40 லட்சம் ரூபாய் நடப்பாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதிய மேம்படுத்தப்பட்ட வேளாண் கருவிகளை விவசாயத்தில் உபயோகப்படுத்துவதன் மூலம், விவசாயிகள் அதிக மகசூல் பெறவும், செலவினத்தைக் குறைக்கவும் முடியும். இதற்காக, மானிய விலையில் நவீன வேளாண் கருவிகள், வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் வழங்கப்படுகிறது.இது குறித்து, பேசிய திருவள்ளூர் மாவட்ட வேளாண்மைப் பொறியியல் துறை செயற்பொறியாளர் ஆதித்தன், ""தேசிய வேளாண்மைப் பொறியியல் துறை மூலம், திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் வேளாண்மை கருவிகள் வாங்குவதற்கு, நடப்பாண்டில் (2011-12) மானியம் வழங்க, 67.40 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,'' என்றார்.

12 கருவிகளுக்கு மானியம் இந்த திட்டத்தில் சுலபமாக இயக்கக்கூடிய விதத்தில் அமைந்துள்ள பண்ணை மற்றும் நவீன வேளாண் கருவிகளுக்கு 50 சதவீதமும்; பெரிய, விலை அதிகமுள்ள, கருவிகளுக்கு 25 சதவீதமும் மானியமாக வழங்கப்படும். சிறிய டிராக்டர், நெல் அறுவடை இயந்திரம் என, மொத்தம், 12 வகையான கருவிகள் வாங்குவதற்கு மானியம்

வழங்கப்படும்.விண்ணப்பிப்பது எப்படி?மானிய விலையில் வேளாண் கருவிகளைப் பெற விரும்பும் விவசாயிகள், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திருவள்ளூர், திருத்தணி மற்றும் பொன்னேரி உதவி செயற்பொறியாளர் வேளாண்மை பொறியியல் துறை அலுவலகங்களில், தங்களது விவசாய நிலத்தின் சிட்டா அடங்கல், ஒரு புகைப்படத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.பதிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்பட்டு, விவசாயிகள் மானியம் வழங்க தேர்வு செய்யப்படுவர். சிறு, குறு, எஸ்.சி., எஸ்.டி., மற்றும் பெண் விவசாயிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.நஷ்டத்தில் விவசாயிகள்விவசாயிகளை அதிகம் கொண்ட, திருவள்ளூர் மாவட்டத்தில், 91,627 எக்டேர் நிலங்களில் விவசாய பணிகள் நடக்கின்றன. தற்போதைய சூழ்நிலையில்; அதிகரித்து வரும் தொழிற்சாலைகளின் ஆள் தேவை, 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டம் போன்றவற்றால், விவசாய பணிகளுக்கு கூலி ஆட்கள் கிடைப்பதில்லை. அப்படியே வந்தாலும், அதிகமாக கூலி கேட்கின்றனர்.இதனால் விவசாயிகளுக்கு அதிக செலவினங்கள் ஏற்பட்டு, லாபம் கிடைப்பதில்லை. பலருக்கு நஷ்டம் ஏற்படுவதால், விவசாய தொழிலுக்கு முழுக்கு போடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு நவீன வேளாண்மை கருவிகள் வழங்கப்பட உள்ளன.

**மரவள்ளிக் கிழங்கு பயிர் அழுகல்: விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2011,01:39 IST

கருத்தை பதிவு செய்ய

சிறுபாக்கம் : மங்களூர், நல்லூர் ஒன்றியங்களில் பயிரிடப்பட்டிருந்த மரவள்ளிக் கிழங்குகள் அண்மையில் பெய்த மழையால் அழுகிப்போய் விவ சாயிகளுக்கு பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. மங்களூர், நல்லூர் ஒன்றியங்களில் வேப்பூர், சிறுபாக்கம், நல்லூர், மங்களூர், நிராமணி உட்பட 70க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த சிறு, குறு விவசாயிகள் கடந்த 2 ஆண்டுகளாக கூலி ஆட்கள் தட்டுப்பாடு, உரம் விலை உயர்வு, போதிய மின் சாரம் இல்லாதது உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் ஒருவருட தோட்டக்கலை பயிரான குங்குமரோஸ், வெள்ளைரோஸ், பர்மா ரக மரவள்ளிக் கிழங்கு பயிர்களை 1,750 ஏக்கர் அளவில் பயிரிட்டிருந்தனர். இந்நிலையில் கடந்த மாதம் பருவமழை தொடங்கியவுடன் முன் எப்போதும் இல்லாத வகையில் திடீரென மூட்டை ஒன்று 150 முதல் 170 வரை விலை சரிவு ஏற்பட்டது. இதனால் மரவள்ளி பயிரிட்ட விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்தனர்.
மேலும் அண்மையில் பெய்த கன மழையால் மரவள்ளிக் கிழங்கு பயிர்கள் முற்றிலும்

அழுகிப்போனது. ஏக்கர் ஒன்றுக்கு 70 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டுள்ளதால் விவ சாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

**அக்டோபர் - நவம்பர் மாதங்களில் சர்க்கரை உற்பத்தி 17 சதவீதம் அதிகரிப்பு**

டிசம்பர் 06,2011,00:10



புதுடில்லி:நடப்பு 2011-12ம் சர்க்கரை பருவத்தில், அக்டோபர், நவம்பர் மாதங்களில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 21.60 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது என, இந்திய சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே காலத்தை விட, 17 சதவீதம் (18.40 லட்சம் டன்) அதிகமாகும்.

உலகளவில் சர்க்கரை உற்பத்தியில், இந்தியா இரண்டாவது மிகப் பெரிய நாடாக திகழ்கிறது. அதே சமயம் சர்க்கரை பயன்பாட்டில், நம் நாடு முன்னணியில் உள்ளது.

சர்க்கரை பருவம் என்பது அக்டோபர் முதல் செப்டம்பர் வரையில் கடைபிடிக்கப்படுகிறது.நடப்பாண்டில், கரும்பு அரவை தாமதமாக தொடங்கப்பட்டது. குறிப்பாக மகாராஷ்டிராவில் அரவை மிகவும் தாமதமாக தொடங்கியது. இருப்பினும், நடப்பு 2011-12ம் சர்க்கரை பருவத்தின் முதல் இரண்டு மாதங்களில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 17 சதவீதம் அதிகரித்துள்ளது.சர்க்கரை உற்பத்தியில், உத்தரபிரதேசம் இரண்டாம் இடம் வகிக்கிறது. நடப்பு பருவத்தின் முதல் இரண்டு மாதங்களில் இதன் உற்பத்தி, 5.30 லட்சம் டன்னாக வளர்ச்சி கண்டுள்ளது. இது, கடந்தாண்டின் இதே மாதத்தில், 1.83 லட்சம் டன்னாக இருந்தது.அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில், சர்க்கரை உற்பத்தியில், 350 ஆலைகள் ஈடுபட்டுள்ளன. இது, கடந்தாண்டில், இதே காலத்தில், 355 ஆக இருந்தது.நடப்பு 2011-12ம் சர்க்கரை பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.6 கோடி டன்னாக இருக்கும் என சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு மதிப்பிட்டுள்ளது.

இது, மத்திய அரசு மதிப்பீடான, 2.46-2.50 கோடி டன் என்ற அளவை விட, சற்று அதிகமாகும். அதேசமயம், நாட்டில் சர்க்கரைக்கான தேவைப்பாடு, 2.20 கோடி டன்னாக இருக்கும் என,

மதிப்பிடப்பட்டுள்ளது.தேவையை விட, உள்நாட்டில் சர்க்கரை உற்பத்தி அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், அண்மையில், மத்திய அரசு, பொது உரிம அடிப்படையில், 10 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

**சேனைக்கிழங்கு விலை கடும் வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2011,03:38 IST

கோபிசெட்டிபாளையம்: சேனைக் கிழங்கு விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளதால், சேனை பயிரிட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.கோபி சுற்று வட்டாரத்தில் கோபி, சிறுவலூர், ஒலகடம், அத்தாணி, கள்ளிபட்டி, பங்களாபுதூர், கொங்கர்பாளையம், கூகலூர் ஆகிய இடங்களில், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, எல்.பி.பி., பாசனம் மூலம், மஞ்சள், கரும்பு, வாழை மற்றும் நெல் அதிகளவில் பயிரிடப்படுகிறது. மஞ்சள், வாழை, கரும்பு ஆகிய பயிர்களில் சேனைக்கிழங்கு ஊடுபயிராகவும், தனியாகவும், 25 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது, அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.கோபி வட்டாரத்தில் அறுவடை செய்யப்படும் சேனை கிழக்கு பாலக்காடு, கோவை, திருச்சூர், திருப்பூர், சேலம், ஆந்திரா, கேரளா, கர்நாடகா மற்றும் திருப்பதி ஆகிய இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. சென்றாண்டு ஒரு கிலோ சேனைக் கிழக்கு 24 ரூபாய், ஒரு டன் 24 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டது. இதன் காரணமாக கோபி பகுதி விவசாயிகள் அதிகளவில் சேனைக் கிழங்கு பயிரிட்டுள்ளனர். நடப்பாண்டு ஒரு கிலோ ஐந்தரை ரூபாய் முதல் ஆறு ரூபாய் வரையும், வெளி மார்க்கெட்டில் 10 முதல் 12 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. சேனைக் கிழங்கு விலை திடீரென பல மடங்கு விலை குறைந்ததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கடுக்காம்பாளையம் விவசாயி ஒருவர் கூறியதாவது:சென்றாண்டு சேனைக் கிழங்கு விலை வெளி மார்க்கெட்டில் ஒரு டன் 24 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்பட்டது. விவசாயிகளிடம் 18 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை கொள்முதல் செய்யப்பட்டது. இதன் காரணமாக தனியாக சேனைக் கிழங்கு பயிரிட்டேன். நடப்பாண்டு சேனைக் கிழங்கு கிலோ ஐந்தரை முதல் ஆறு ரூபாய் வரை விற்கப்படுகிறது. வெளிமார்க்கெட்டில் 10 முதல் 12 ரூபாய் வரை விற்கப்படுகிறது. சேனை கிழங்கு விலை மடங்கு குறைந்ததால் தனியாக பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படும். மஞ்சள், வாழை, கரும்பு போன்ற பயிர்களில் ஊடுபயிராக பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு பெரிய அளவில் இழப்பு வர வாய்ப்பில்லை.எந்த ஒரு விளை பொருளையும் விலை அதிகரிக்கிறது என்பதற்காக பயிரிடக் கூடாது. மஞ்சளுக்கு அதிக விலை கிடைத்ததால், அனைவரும் மஞ்சள் பயிரிட்டனர்.தற்போது, மஞ்சள் விலை வீழ்ச்சியாக உள்ளது. விலைவாசி உயர்வு, விவசாய

இடுபொருட்களின் விலை உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள குறு விவசாயிகள் சேனைக் கிழங்கு விலை வீழ்ச்சியால் மேலும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.இவ்வாறு அவர் கூறினார்

**குறைந்தளவு தண்ணீரில் பெரு நெல்லி சாகுபடி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 06,2011,03:37 IST

ஈரோடு : மொடக்குறிச்சி அருகே பாரப்பாளையத்தில் மருத்துவ குணமுள்ள பெரு நெல்லிக்காய் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.நெல்லிக்காயில் சிறிய நெல்லிக்காய், பெரு நெல்லிக்காய் என இரு வகைகள் உண்டு. சிறிய நெல்லிக்காய் இனிப்பும், புளிப்பும் கலந்திருக்கும். பெரு நெல்லிக்காய் துவர்ப்பாக இருப்பதால், சர்க்கரை வியாதியை கட்டுப்படுத்தும். தமிழகத்தில் சேலம், ஏற்காடு, ஈரோடு, நாமக்கல், கரூர் மாவட்டங்களில் அதிகளவு பெரு நெல்லிக்காய் மரங்கள் உள்ளன. குறைந்தளவு தண்ணீர் போதுமானது என்பதால், மேட்டுப்பாங்கான மானாவாரி நிலங்கள் நெல்லிக்காய் சாகுபடிக்கு ஏற்றவை. மொடக்குறிச்சி யூனியனுக்கு உட்பட்ட எழுமாத்தூர் அருகே, பாரப்பாளையத்தில் குண்டு நெல்லிக்காய் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.அப்பகுதி விவசாயி கூறியதாவது: சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு கண்கண்ட மருந்தாக நெல்லிக்காய் உள்ளது. பாரப்பாளையத்தில் இரண்டு ஏக்கர் பரப்பளவில் நெல்லிக்காய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மருத்துவ குணம் கொண்ட நெல்லிக்காய் உருண்டு, திரண்டு வளர்ந்துள்ளது. மரத்தில் இருந்து கீழே விழும் நெல்லிக்கனிகள் உலர்ந்து காணப்படும்.இந்த வகை காய்களை வெயிலில் உலர்த்தி, சித்த மருந்துக்காக அதிகளவில் வாங்கி செல்கின்றனர். 15 நெல்லிக்காய், 20 ரூபாய் வரை விலை போகிறது. உலர்ந்த நெல்லிக்காய்கள், 40 ரூபாய் வரை விலைபோகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

**சர்க்கரை உற்பத்தி 17 சதவீதம் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : 12/7/2011 12:47:45 AM



புதுடெல்லி : நடப்பு 2011&12ம் நிதியாண்டின் அக்டோபர்&செப்டம்பர் சீசனில் நாட்டின் சர்க்கரை உற்பத்தி 17 சதவீதம் அதிகரித்துள்ளது. உத்தர பிரதேசத்தின் சர்க்கரை உற்பத்தி அதிகரித்ததன் காரணமாக, இந்த ஆண்டின் நவம்பர் 30ம் தேதி வரையிலான

நாட்டின் சர்க்கரை உற்பத்தி 21.6 லட்சம் டன்னாக அதிகரித்தது. கடந்த ஆண்டின் இதே காலத்தில் இது 18.5 லட்சம் டன்னாக இருந்தது. இக்கால கட்டத்தில் உத்தர பிரதேசத்தின் சர்க்கரை உற்பத்தி 5.3 லட்சம் டன்னாக அதிகரித்தது.

## *இரண்டு மாதங்களில் சர்க்கரை உற்பத்தி 17 சதவீதம் வளர்ச்சி*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நடப்பு சர்க்கரை பருவத்தின் முதல் இரண்டு மாதங்களில் சர்க்கரை உற்பத்தி 21.60 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, கடந்த பருவத்தின் இதே காலத்தில் 18.40 லட்சம் டன்னாக இருந்தது. ஆக, உற்பத்தி 17 சதவீதம் உயர்ந்துள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.*

*சர்வதேச அளவில் சர்க்கரை உற்பத்தி மற்றும் பயன்பாட்டில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. நம் நாட்டில் சர்க்கரை பருவம் என்பது அக்டோபர் முதல் செப்டம்பர் வரையிலான ஓர் ஆண்டு காலமாகும். சர்க்கரை உற்பத்தியில் மகாராஷ்டிரா மாநிலம் முதலிடத்தில் இருந்து வருகிறது. இங்கு கரும்பு அரவைப் பணிகள் தாமதமாக தொடங்கியுள்ள நிலையிலும் சர்க்கரை உற்பத்தி கணிசமான அளவில் உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

## முல்லைப்பெரியாறு அணை விவகாரத்தில் ஓரணியில் போராட முடிவு

## கேரள அனைத்துக்கட்சி கூட்டத்தில் தீர்மானம்

*திருவனந்தபுரம், டிச.7–*

*முல்லைப்பெரியாறு அணை பிரச்சினையில் ஓரணியில் நின்று போராடவும் சட்ட ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க கேரள காங்கிரஸ் கூட்டணி அரசுக்கு அதிகாரம் அளித்தும் அனைத்துக்கட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*அனைத்துக்கட்சி கூட்டம்*

*முல்லைப்பெரியாறு அணை பழமையாகி விட்டதால் உடைந்து விடும் என்றும், புதிய அணையை கட்ட வேண்டும் என்றும் கேரள அரசும், அங்குள்ள அரசியல் கட்சிகளும் கூறி வருகின்றன. மேலும், தற்போதுள்ள அணையின் நீர்மட்டத்தை 120 அடியாக குறைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றார்கள். தற்போது, இந்த விவகாரம் சூடுபிடித்துள்ளது. இதற்கிடையே, இரண்டு மாநிலங்களுக்கு இடையே பேச்சுவார்த்தை நடத்த மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது. அதை தமிழக அரசு புறக்கணிப்பதாக அறிவித்து விட்டது. இந்த சூழ்நிலையில், கேரள மாநிலத்தில் அனைத்துக்கட்சி கூட்டம் நேற்று நடந்தது.*

*முதல்–மந்திரி உம்மன்சாண்டி தலைமையில் நடந்த அந்த கூட்டத்தில் காங்கிரஸ் கூட்டணி கட்சிகளின் தலைவர்களும், முன்னாள் முதல்–மந்திரியும் மார்க்சிஸ்ட் மூத்த தலைவருமான அச்சுதானந்தன் உள்ளிட்ட இடதுசாரி தலைவர்களும், பா.ஜனதா உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.*

*தீர்மானம் நிறைவேற்றம்*

*அனைத்துக்கட்சி கூட்டத்தில், முல்லைப்பெரியாறு அணை விவகாரம் குறித்து விவாதிக்கப்பட்டது. இது தொடர்பாக டிசம்பர் 15 அல்லது 16–ந் தேதி அன்று மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ள அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தைக்கும் கூட்டத்தில் வரவேற்பு தெரிவிக்கப்பட்டது.*

*மேலும், முல்லைப்பெரியாறு அணைக்கு பதிலாக புதிய அணை கட்டுவதிலும், தற்போதைய அணையின் நீர்மட்டத்தை 120 அடியாக உடனடியாக குறைப்பதிலும் அனைத்து அரசியல் கட்சிகளும் ஓரணியில் நின்று போராடுவது என்றும் தீர்மானம் நிறைவேறியது. இது தவிர, முல்லைப்பெரியாறு பிரச்சினையில் தமிழகத்துடன் நல்லுறவு கெட்டு விடாமல் அனைத்து வித சட்ட ரீதியான மற்றும் நிர்வாக ரீதியான நடவடிக்கைகளை எடுக்க கேரள காங்கிரஸ் கூட்டணி அரசுக்கு அதிகாரம் அளித்தும் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*கூட்டத்துக்கு பிறகு, முதல்–மந்திரி உம்மன் சாண்டி கூறியதாவது:–*

*தண்ணீர் வழங்க தயார்*

*முல்லைப்பெரியாறில் இருந்து தமிழ்நாட்டுக்கு தண்ணீர் வழங்குவதை கேரளா எதிர்க்கவில்லை. எங்கள் மக்களின் பாதுகாப்பு குறித்து மட்டுமே நாங்கள் கவலைப்படுகிறோம். தமிழ்நாட்டுக்கு*

தண்ணீர். கேரளாவுக்கு பாதுகாப்பு என்பதே எங்களுடைய கொள்கை. புதிய அணை கட்டினாலும் அதே அளவு தண்ணீரை தமிழகத்துக்கு தொடர்ந்து அளிப்பதற்கு எந்த விதமான உத்தரவாதத்தையும் அளிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மக்களுக்கு போராட்டம் நடத்த உரிமை உள்ளது. ஆனால், போராட்டத்தின் பெயரால் வன்முறையில் இறங்கக் கூடாது. குமுளி, கம்பம்மேடு பகுதிகளில் துரதிர்ஷ்டவசமாக சில அசம்பாவித சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. யாரும் சட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துக்கொள்ள கூடாது. அங்கு 144 தடை உத்தரவு போடப்பட்டுள்ளது. அமைதியை நிலைநாட்ட அனைத்துவித நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

தலைமை வக்கீல் மீது நடவடிக்கை

கேரள ஐகோர்ட்டில் அணையின் பாதுகாப்பு குறித்து மாநில தலைமை வக்கீல் தண்டபாணி தெரிவித்த கருத்துகள் குறித்து கூட்டத்தில் எதிர்க்கட்சியினர் கவலை தெரிவித்தனர். அது குறித்து விரிவாக ஆய்வு செய்த பின்னர், தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்க்கட்சி தலைவர்களிடம் அரசு சார்பாக உறுதி அளித்துள்ளேன்.

மத்திய நீர்வளத்துறை அமைச்சகத்திடம் இருந்து நீர்வளத்துறை செயலாளர்களுக்கு பேச்சுவார்த்தை தொடர்பாக கடிதம் வந்துள்ளது. அதில், டிசம்பர் 15 அல்லது 16–ந் தேதி அன்று இரு மாநில அதிகாரிகளும் பேச்சுவார்த்தை நடத்த வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் இந்த முடிவை நாங்கள் வரவேற்கிறோம்.

இவ்வாறு உம்மன் சாண்டி தெரிவித்தார்.